நாமக்கல் மாவட்டம்

**கொரோனா நோய்த்தொற்று பாதிக்கப்பட்ட நபர்களின் வசிப்பிடங்களை சுற்றியுள்ள பகுதிகள் கட்டுப்பாட்டு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து அப்பகுதிகளை கிருமிநாசினி கொண்டு தொடர்ந்து சுத்தம் செய்யும் பணி குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், கொரோனா நோய்த்தொற்று பாதிக்கப்பட்ட நபர்களின் வசிப்பிடங்களை சுற்றியுள்ள பகுதிகள் கட்டுப்பாட்டு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து அப்பகுதிகளை கிருமிநாசினி கொண்டு தொடர்ந்து சுத்தம் செய்யும் பணி குறித்த ஆலோசனைக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கா.மெகராஜ்.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (11.04.2020) நடைபெற்றது.

நாமக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்த்தொற்று பாதிக்கப்பட்ட நபர்களின் வசிப்பிடங்களை சுற்றியுள்ள பகுதிகளை கண்காணிக்க அலுவலர்கள் மற்றும் மருத்துவர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. கட்டுப்பாட்டு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்ய இக்குழுவிற்கு கிருமி நாசினி பயன்படுத்தும் முறை குறித்தும், பிளீச்சிங் பவுடரில் இருந்து 1% ஹைபோகுளோரைட் கலவை தயாரிக்கும் முறை குறித்தும் மருத்தவர்களால் செயல்முறை மூலமாக விளக்கப்பட்டது.

கொரோனா நோய் தொற்று உள்ள நபர் இரும்பும் போதும் தும்பும் போதும் நீர்த்திவலைகள் வெளிப்படுகிறது. அவ்வாறு வெளிப்படும் நீர்த்திவலைகள் படிந்துள்ள சேர், மேசை, கட்டில், துணிமணிகள், டிவி ரிமோட் போன்ற பொருட்களை தொடும்போது கொரோனா தொற்று பரவுகிறது. வீடுகளில் உள்ள தரை தளம், அடிக்கடி கைகளால் தொடும் இடங்களான இருக்கைகள், கைப்பிடிகள் மற்றும் அதன் பகுதிகள், கதவு கைப்பிடிகள் நாற்காலிகள், மேஜை, செல்போன்கள், கணிப்பொறிகள் ஆகியவற்றை கிருமி நாசினி மூலம் நன்கு துடைத்து கிருமி நீக்கம் செய்ய வேண்டும்.

பொதுமக்கள் பிளீச்சிங் பவுடரில் இருந்து கிருமிநாசினி திரவம் தாங்களாகவே தயாரிக்க 33% குளோரின் இருப்பு உள்ள 320 கிராம் பிளீச்சிங் பவுடரை 10 லிட்டர் தண்ணீரில் நன்கு கலக்கி, 30 நிமிடங்கள் கழித்து, தெளித்த மேற்பரப்பிலுள்ள கலவையை வேண்டுமளவிற்கு வேறு பக்கெட்டிற்கு மாற்றி, தெளித்த நீரை கிருமி நாசினியாக பயன்படுத்த வேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்ட வீட்டில் உள்ளவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள் குறித்து தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளதாவது, கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட நாடு அல்லது வேறு மாநிலத்திலிருந்து திரும்பிய ஒரு நபர் அல்லது கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டவரிடம் உடன் இருந்தவர்கள் பிறருக்கு நோய்க்கிருமி பரவுவதைத் தடுக்க சமுதாயத்திவிருந்து தன்னை விலக்கி வீட்டில் தனி

அறையில் தனிமைப்படுத்திக் கொண்டு சில வழிமுறைகளை கடைப்பிடிப்பதையே வீட்டில் தனிமைப்படுத்தி இருத்தல் (HOME QUARANTINE) என அழைக்கிறோம். தனிமைப்படுத்தப்பட்ட நபருக்கு தனி கழிப்பறையுடன் கூடிய நல்ல காற்றோட்டமான தனி அறையை ஒதுக்க வேண்டும். வீட்டில் உள்ள அனைவருக்கும் முகக்கவசம் அணிய வேண்டும். தனிமைப்படுத்தப்பட்ட நபர் எக்காரணம் கொண்டும் வீட்டை விட்டு வெளியே செல்லக்கூடாது.

மேலும் வீட்டிற்குள்ளேயே அங்குமிங்கும் செல்லாமல் அவருக்கு ஒதுக்கப்பட்ட அறையிலேயே இருக்க வேண்டும். வீட்டில் ஒரு குறிப்பிட்ட நபர் மட்டுமே தனிமைப்படுத்தப்பட்ட நபருக்கு பராமரிப்பு பணிகளை செய்தல் வேண்டும். பராமரிப்புப் பணி செய்பவரும் தவறாமல் முகக்கவசமும் கையுறையும் அணிந்திருக்க வேண்டும். தனிமைப்படுத்தப்பட்டவர் பயன்படுத்தும் பொருட்களை மற்றவர்கள் பயன்படுத்தக்கூடாது. தனிமைப்படுத்தப்பட்டவரின் உடைகள், படுக்கை விரிப்பு போன்றவற்றை உதறாமல் முகக்கவசம் மற்றும் கையுறை அணிந்து தனியாக சோப்பு நீரில் ஊறவைத்து துவைத்து வெயிலில் காய வைக்க வேண்டும். முக்ககவசம் மற்றும் கையுறை ஆகியவற்றை கழற்றிய பின் கைகளை நன்கு சோப்பு உபயோகித்து கழுவ வேண்டும். வீட்டில் வயதானோர், கர்ப்பிணி பெண்கள், குழந்தைகள் மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள் தனிமைப்படுத்தபட்டவருடன் எவ்வித தொடர்பும் கொள்ளாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

தனிமைப்படுத்தப்பட்டவருக்கு, காய்ச்சல், சளி, இருமல் மற்றும் மூச்சுத்திணறல் போன்ற வைரஸ் அறிகுறிகள் தென்பட்டால் உடன் 104 அல்லது கட்டணமில்லா தொலைப்பேசி எண் 1800 120 555550ல் ஆலோசனை பெறலாம். மேலும் அருகில் உள்ள அரசு மருத்துவமனையை தொடர்பு கொண்டு ஆலோசனை பெறலாம். அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த நபர்களையும் அடுத்த 28 நாட்களுக்கு தனிமைப்படுத்த வேண்டும். வீட்டை தினமும் மூன்று முறையாவது கிருமி நாசினி கொண்டு தூய்மைப்படுத்த வேண்டும் என தமிழ்நாடு அரசு அறிவுறுத்தியுள்ளது.

எனவே பொதுமக்கள் கொரோனா நோய்த்தொற்றிலிருந்து தங்களை பாதுகாக்க கிருமிநாசினி திரவத்தை தங்கள் வீடுகளிலேயே தயாரித்து வீடுகளை சுத்தம் செய்ய வேண்டும்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.துர்காமூர்த்தி, துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் மரு.எஸ்.சோமசுந்தரம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கோ.மலர்விழி, மகளிர் திட்ட இயக்குநர் டாக்டர்.இரா.மணி உட்பட அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், நாமக்கல் மாவட்டம்.